

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு: 83 – ஒலி: 104 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 08 – சனிக்கிழமை 23 நவம்பர் 2024 – திருச்சி ★★ 12 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 104: Thiruvalluvar Year - 2055 - Karthigai 08 - Saturday 23 November 2024 - Trichy ★★ 12 + 12 Pages ₹ 5.00


## ரூ.330 கோடியில் - திருவள்ளூர் மாவட்டம்

# பட்டாபிராமில் புதிய ‘டைடல்’ பூங்கா !

## திருமுடிவாக்கத்தில் - துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ.23-**

**திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் ரூ.330 கோடி செலவில் புதிய ‘டைடல்’ பூங்கா மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.**

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாட்டின் வடபகுதியிலுள்ள நகரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை கொண்டு செல்லும் நோக்கத்துடன் திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் 11.41 ஏக்கர் பரப்பளவில், 330 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் 5.57 லட்சம் சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள டைடல் பூங்கா தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று (22.11.2024) திறந்து வைக்கப்பட்டது.



இக்கட்டடத்தில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்பட தேவையான, நவீன தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயரழுத்த மும்முனை மின் இணைப்பு மற்றும் மின் இயக்கி வசதிகள், மின்தூக்கி வசதிகள், சுகாதார வசதிகள், தீ பாதுகாப்பு மற்றும் கட்டட மேலாண்மை வசதிகள், சிசிடிவி கேமரா வசதிகள், 24X7 பாதுகாப்பு வசதிகள், உணவகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்ற அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டடமானது, 6,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையிலும் பசுமை கட்டடம் வழிமுறைகளின்படியும் கட்டப்பட்டுள்ளது.

**இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு! பொருளாதார மேம்பாடு!**

பட்டாபிராமில் இப்புதிய ‘டைடல்’ பூங்கா அமைக்கப்படுவதன் மூலம் தமிழ்நாட்டின் வடபகுதியைச் சார்ந்த குறிப்பாக திருவள்ளூர் உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும்.

நேற்று நடைபெற்ற பட்டாபிராம் ‘டைடல்’ பூங்கா திறப்பு விழாவின்போது, பல்வேறு தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அப்பூங்காவில் தள ஒதுக்கீட்டுக்கான ஆணைகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம் திறப்பு விழா**


அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.11.2024) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக 18.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்தார்.

இப்பெருங்குழும திட்டத்தின் முதல் பகுதியாக 18.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13.33 கோடி ரூபாய் மானியத்துடன் வடிவமைப்பு மையம் (Engineering Design Centre), மறு பொறியியல் பரிசோதனைக் கூடம்

(ReEngineering Lab), சேர்க்கை உற்பத்தி மையம் (Additive Manufacturing Centre), மேம்பட்ட பயிற்சி மையம், காப்புரிமை (Patent) பதிவு வசதி மையம், நவீன பரிசோதனை மையம் (Testing Lab) போன்றவை நிறுவப்பட்டுள்ளன.

**சிறு,குறு நிறுவனங்கள் பயன்பெற வசதி ஏற்பாடு!**

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள 14க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டை சங்கத்தினரால் இணைந்து உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கு ஊர்தி (Special Purpose Vehicle) மூலம் அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் பொது வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், இளம் தலைமுறை பொறியாளர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்படுத்தி பயன் பெறலாம்.



---

### சூரிய மின்சக்தி திட்டம் தொடங்க ரூ.2,100 கோடி லஞ்சம்! அமெரிக்க நீதிமன்றத்தில்

# கவுதம் அதானி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் !

### பிரதமர் மோடி காப்பாற்றிவரும் அதானியை உடனே கைது செய்ய ராகுல்காந்தி வலியுறுத்தல்!

புதுடெல்லி, நவ.23–

அமெரிக்க நீதிமன்றத்தில் கவுதம் அதானி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதானி குழும நிறுவன பங்குகள் கடும் சரிவை சந்தித்துள்ளன. இதனிடையே அதானியை கைது செய்ய ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவில் சூரிய மின்சார விநியோகம் தொடர்பான ஒப்பந்தம் பெறுவதற்கு, சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் லஞ்சம் தர, பிரபல தொழிலதிபர் கவுதம் அதானி முன்வந்ததாகக் கூறி அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக அதானி பங்குகள் 10 முதல் 28 சதவீதம் வரை சரிந்தன. அதானி எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவன பங்கு விலை 10 சதவீதம் வரையும், அதானி போர்ட் விலையும் 10 சதவீதத்திற்கு மேலும் சரிந்து வர்த்தகமானது. அதானி பவர் நிறுவன பங்கு விலை 13 சதவீதமும், அதானி எனர்ஜி நிறுவன பங்கு விலை 20 சதவீதமும் சரிந்துள்ளது. இதனால் அதானி நிறுவனங்களில் முதலீடு செய்த முதலீட்டாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதனிடையே, அதானி ஊழலை நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடத்த வேண்டும் என காங்கிரஸ் கட்சி மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இதுகுறித்து அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

**அதானியை பாதுகாக்கும் மோடி!**

சூரிய மின்சக்தி திட்டத்திற்காக 2 ஆயிரத்து 100 கோடி ரூபாய் லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் கவுதம் அதானிக்கு அமெரிக்க நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார். கவுதம் அதானியின் ஊழல் குறித்து பல நூறு கேள்விகள் காங்கிரஸ் சார்பில் முன்வைக்கப்பட்டும் இதுவரை எந்தவொரு விளக்கமும் அளிக்கப்படவில்லை, நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர் விமர்சித்துள்ளார்.

முறைகேடுகளில் ஈடுபடும் அதானியை பிரதமர் மோடி பாதுகாக்கிறார் என்றும் ஜெய்ராம் ரமேஷ் குற்றஞ்சாட்டியுள்ளார். தற்போது, அமெரிக்க நீதிமன்றமே பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளதால் இனியாவது அதானி ஊழலை நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரிக்க வேண்டும் என்று ஜெய்ராம் ரமேஷ் வலியுறுத்தியுள்ளார்.

சூரிய மின்சக்தி சப்ளை ஒப்பந்தத்தை பெறுவதற்காக இந்திய அதிகாரிகளுக்கு 2 ஆயிரத்து100 கோடி ரூபாய் லஞ்சம் கொடுக்க முயன்றதாக அமெரிக்க நீதிமன்றத்தில் கவுதம் அதானி மீது வழக்கு தொடரப்பட்டது. அமெரிக்க முதலீட்டாளர்களை ஏமாற்றுதல், அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தல் போன்ற குற்றச்சாட்டை கவுதம் அதானி மீது அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் எக்சேஞ்ச் கமிஷன் சுமத்தியுள்ளது. அதானி நிறுவனத்தில் முதலீடு செய்த முதலீட்டாளர்களை கவுதம் அதானி ஏமாற்றியதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கை விசாரித்த அமெரிக்காவின் புரூக்ளின் நீதிமன்றம், கவுதம் அதானி உள்ளிட்ட 7 பேருக்கு பிடிவாரண்ட் பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கில் அதானி, அதானி மருமகன் சாகர் அதானி உள்ளிட்ட 8 பேர் மீது அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க சட்டங்களுக்கு எதிராக அமெரிக்க முதலீட்டாளர்களிடமிருந்து 175 முதலீடுகள் பெறப்பட்டுள்ளது என்றும், இந்தியாவிலுள்ள பல மாநிலங்களில் சோலார் நிறுவனம் தொடங்க லஞ்சம் கொடுக்க முயற்சி செய்யப்பட்டுள்ளதாகவும், அமெரிக்காவில் உள்ள வழக்கை மறைத்து இந்தியாவில் பல மாநிலங்களில் முதலீடுகள் நடந்துள்ளது என்றும் குற்றப்பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்திய அதிகாரி ஒருவரை 7 முறை அதானி சந்தித்துள்ளார் என்றும், ஊழல் ஆவணங்கள் பலவும் அழிக்கப்பட்டுள்ளன என்றும் குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் FBI உள்ளிட்ட விசாரணை அமைப்புகளின் அறிக்கைகளின் அடிப்படையில் இந்த குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. புரூக்ளின் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த குற்றப்பத்திரிகையின் நகலும் தற்போது வெளியாகியுள்ளது.

**எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வலியுறுத்தல்!**

அமெரிக்காவில் அதானி மீது எழுந்துள்ள குற்றச்சாட்டு குறித்து உடனடி விசாரணை தேவை என்றும், இந்த விவகாரத்தில் அதானி கைது செய்யப்பட வேண்டும் என்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த ராகுல்காந்தி, அதானி இந்தியா மட்டுமல்லாது, அமெரிக்காவிலும் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாகவும், இதனால், அவரை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். தொடர்ந்து முறைகேட்டில் ஈடுபட்டு வரும் அதானியை பிரதமர் மோடி காப்பாற்றி வருவதாகவும், இதனால், அதானி குழும முறைகேடுகள் குறித்து உடனடி விசாரணை தேவை என்றும் தெரிவித்துள்ளார். அதானி மீது பிரதமர் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும், ஏனெனில் அதானியின் கைப்பாவையாக மோடி செயல்படுவதாகவும் ராகுல்காந்தி குற்றம்சாட்டினார்.

---

### இயக்குநர் பி.அமிர்தம் வரவேற்புரை! ஜி.ராமானுஜம் முன்னிலை! புரட்சித் தமிழன் சத்யராஜ் ஏற்புரை!

# முத்தமிழ்ப் பேரவை பொன்விழா ஆண்டு இசை விழா!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கி – நூலை வெளியிட்டு விழாச் சிறப்புரை!

சென்னை, நவ. 23-

சென்னை - 28, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் முத்தமிழ்ப் பேரவையின் பொன் விழா ஆண்டு இசை விழா - விருதுகள் வழங்கும் விழா நாளை (24.11.2024 - ஞாயிறு) மாலை 4.30 மணியளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் முத்தமிழ்ப் பேரவைச் செயலாளர் இயக்குநர் பி.அமிர்தம் வரவேற்புரையாற்றுகிறார்.

முத்தமிழ்ப் பேரவைத் தலைவர் ஜி.ராமானுஜம் முன்னிலை வகிக்கிறார். விழாவில் ‘கலைஞர்’ விருது பெறும் புரட்சித் தமிழன் சத்யராஜ் ஏற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அவர்களின் வாழ்க்கை சரிதம் நூலை வெளியிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விழாச் சிறப்புரையாற்றுகிறார்.

மிருதங்கச் செல்வம் - கலைமாமணி டாக்டர் திருவாரூர் பக்தவத்சலம் நன்றி கூறுகிறார்.

24.11.2024 ஞாயிறு மாலை 4.30 மணியளவில் - மங்கள இசையுடன் தொடங்கும் இவ்விழாவில் கலைமாமணி திருப்பாம்புரம் சகோதரர்கள் டி.கே.எஸ். மீனாட்சி சுந்தரம், டி.எஸ்.என்.சேஷகோபாலன் ஆகியோர் நாதஸ்வரமும், கலைமாமணி திருப்பங்கூர் டி.ஜி. முத்து குமாரசாமி, சுவாமிமலை சி.குருநாதன் ஆகியோர் சிறப்பு தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6 மணியளவில் - விருது வழங்கும் விழா நடை பெறுகிறது.

கலைஞர் விருதை - புரட்சித் தமிழன் சத்யராஜியும், ராஜ ரத்னா விருதை - திருப்பாம்புரம் டி.கே.எஸ்.மீனாட்சி சுந்தரமும், இயல் செல்வம் விருதை - ஆண்டாள் பிரியதர்ஷினியும், இசைச் செல்வம் விருதை - முனைவர் காயத்ரி கிரீஷும், நாதஸ்வரச் செல்வம் விருதை - திருக்கடையூர் டி.எஸ். எம்.உமாசங்கரும், தவில் செல்வம் விருதை - சுவாமி மலை சி.குருநாதனும், கிராமியக் கலைச் செல்வம் விருதை - முனைவர் தி.சோமசுந்தரமும், நாட்டியச் செல்வம் விருதை - பார்வதி ரவி கண்டசாலாவும் பெறுகின்றனர்.

நவ.25,26,27 மூன்று நாட்கள் இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

25.11.2024 திங்கள் மாலை 5.30 மணியளவில் - கலைமாமணி நாதஸ்வரச் செல்வம் திருக்கடையூர் டாக்டர் டி.எஸ்.முரளிதரன், திருக்கடையூர் டி.எஸ்.எம்.உமா சங்கர் ஆகியோர் நாதஸ்வரமும், தாராபுரம் வி.எம்.கணேஷ் தவில் இசை கலா ரத்னாகரம், இடும்பாவனம் கே.எஸ். கே.மணிகண்டன் ஆகியோர் தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6.30 மணியளவில் - ஷண்முக சங்கீத சிரோன்மணி விக்னேஷ் ஈஸ்வர் பாட்டும், சாயிரக்ஷித் வயலினும், மிருதங்கச் செல்வம் சங்கீதா கலாநிதி, கலைமாமணி டாக்டர் திருவாரூர் பக்தவத்சலம் மிருதங்கமும், பிஸ்மில்லாகான், யுவபுரஷ்கார் விருதாளர் அனிருத் ஆத்ரேயா கஞ்சிராவும் இசைக்கின்றனர்.

மாலை 7.45 மணியளவில் - தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையம் வழங்கும் கலைமாமணி தி.சோமசுந்தரம் குழுவினரின் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

26.11.2024 - செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் - செம்பனார் கோயில் வித்வான் எஸ்.ஆர்.ஜி.எஸ். மோகன்தாஸ், திருமயிலை கே.செல்வம் ஆகியோர் நாதஸ்வரமும், கலைமாமணி மன்னார்குடி எஸ்.ஆர்.வாசுதேவன் சிறப்பு தவிலும், தவில் செல்வம் திருக்கடையூர் டி.ஜி.பாபு தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6.30 மணியளவில் - அக்கரை சகோதரிகள் எஸ்.சுபலட்சுமி, எஸ். சொர்ணலதா ஆகியோர் பாட்டிசைக்கின்றனர். விட்டல் ரங்கன் வயலினும், டெல்லி சாய்ராம் மிருதங்கமும் பி.ஸ்ரீசுந்தரகுமார் கஞ்சிராவும் இசைக்கின்றனர்.

மாலை 7.45 மணியளவில் - கலைமாமணி பார்வதி ரவி கண்டசாலா, கலா பிரதர்ஷினி நடனப் பள்ளி மாணவிகளுடன் பரத நாட்டியமாடுகிறார்.

27.11.2024 புதன்கிழமை - மாலை 5.30 மணியளவில் - சங்கீத நாடக அகாடமி யுவ புரஸ்கர் விருதாளர்கள் சின்னமனூர் முனைவர் ஏ.விஜய் கார்த்திகேயன், இடும்பாவனம் வி.பிரகாஷ் இளையராஜா ஆகியோர் நாதஸ்வரமும் தவில் செல்வம் திருக்கடையூர் டி.ஜி.பாபு சிறப்பு தவிலும், கலைஞான சிகரம் இடும்பாவனம் கே. எஸ்.கே.மணிகண்டன் தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6.30 மணியளவில் - முனைவர் காயத்ரி கிரிஷ் பாட்டும், பி.அனந்த கிருஷ்ணன் வயலினும், என்.சி.பரத்வாஜ் மிருதங்கமும் இசைக்கின்றனர்.

மாலை 7.45 மணியளவில் - கலைமாமணி குரு முத்தரசி ரவி, கலைக் கோயில் நாட்டியப்பள்ளி மாணவிகளுடன் பரத நாட்டியமாடுகிறார்.

இவ்விழாவில் அனைவரும் பங்கேற்று விழாவினை சிறப்பிக்க வேண்டுமாய் விழாக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.